# Special Issue

# National Conference on Cultural Records in Tamil literature

## (இனக்குழுப் பண்பாடும் ஆய்வுமுறைகளும்)

Organized by

Department of Tamil,

Sri Kaliswari College (Autonomous)

Sivakasi, on 29.04.2022

in collaboration with


## International Research Journal of Tamil

## சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

(UGC Care Approved & MLA Indexed Journal)

# Guest Editors Message



தமிழ் ஆராய்ச்சியின் போக்கை மேம்படுத்த வேண்டும். சமுதாய அக்கறையுள்ள ஆய்வாளர்களை உருவாக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு தொடங்கப்பட்ட சர்வதேசத் தமிழ் ஆய்விதழ் பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரத்தோடு தமது பணியைச் செம்மையாகச் செய்து வருவது பாராட்டத்தக்கது. தமிழ் மொழியின் செழுமையும் இலக்கிய, இலக்கண வளமும் குறித்த ஆழ்ந்த ஆய்வுகள் மேன்மேலும் பெருகிட சர்வதேசத் தமிழ் ஆய்விதழின் பணி போற்றுதற்குரியது.



தமிழ்ப் பண்பாட்டின் வேராகிய இனக்குழு வாழ்வியல் முறை குறித்த படைப்புகளும் வரலாற்றுப் பதிவுகளும் தொல்லியல் ஆய்வுகளும் பல்கிப் பெருகிக் காணப்பட்டாலும் இலக்கியங்களின் தோற்றம் இனக்குழுவிடமிருந்தே உருவானது என்ற அடிப்படையில் இனக்குழுக்கள் சார்ந்த பண்பாடுகள் குறித்த பொருண்மையிலான ஆய்வுக்களமாக இனக்குழுப் பண்பாடும் ஆய்வுமுறைகளும் எனும் தலைப்பிலான தேசியக் கருத்தரங்கு நடைபெற உறுதுணையாக இருந்த சர்வதேசத் தமிழ் ஆய்விழுக்கு நன்றியை உரித்தாக்குகின்றோம்.

இனக்குழு மக்களிடமிருந்த பல்வேறு மரபுக் கூறுகள் இருபத்தொன்றாம் நூற்றாண்டிலும் பின்பற்றப்படுகின்றன என்பதையும் தனிமனித ஒருமைப்பாடு இனக்குழு வாழ்க்கைமுறையிலிருந்து இன்றும் மனித நேய அறத்தோடு பின்பற்றப்படுவதையும் நாம் உணர இக்கருத்தரங்குச் சிறந்த களமாக இருந்தது. இலக்கியங்கள் காட்டும் ஒரு தனிப்பட்ட சமூகம் மற்றும் இனம் சார்ந்த பண்பாட்டு பதிவுகளையும் இனத்தின் தொன்மைகளையும் இன்றைய இளைய சமுதாயத்தினர் தெளிவுறும்படியான ஆய்வுகள் உருவாக வேண்டும். தொழில் அடிப்படையிலான இனக்குழு வாழ்வே பின்னாளில் தனிப்பட்ட சாதியச் சமூமாகியது என்பதையும் பிறப்பினால் மக்களிடையே வேறுபாடு காண்பது தமிழ் மரபல்ல என்பதையும் இளைய தலைமுறையினர் உணரும் வகையில் மேலும் பல்வேறு பொருண்மைகளில் ஆய்வுக்களத்தினை உருவாக்கித் தமிழ்ச் சமூகத்தில் ஆரோக்கியமான ஆய்வுச் சிந்தனைகள் தோன்றுவதற்குச் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ் தொடர்ந்து பணியாற்றிட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம்.



**திருமதி சு.கோமதி அழகு**
(கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்)

**Mrs. S. Gomathi Azhagu**
**Guest Editor cum Conference Convenor**



**முனைவர் மு.சங்கர்**
(கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்)

**Dr. M.Sankar**
**Guest Editor cum Conference Convenor**